AL/2014/72/T-I

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

**Department of Examinations, Sri Lanka**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்**
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2014**

දෙමළ I
தமிழ் I
Tamil I

**72 T I**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **இரு** வினாக்களுக்கும், பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்
அறியா துண்ட மஞ்ஞை யாடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பா கின்றே.

(அ) இச் செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
(ஆ) இச் செய்யுளில் இடம்பெற்றுள்ள உள்ளுறை உவமத்தை இனங்கண்டு, அதனூடாக உணர்த்தப்படும் செய்தியை விளக்குக.
(இ) இச் செய்யுளில் இடம்பெற்றுள்ள உவமை அணியை விளக்குக.
(ஈ) இச் செய்யுள்மூலம் அறியப்படும் அக்காலச் சமூக வழக்கங்களைக் குறிப்பிடுக.

(ii) விலங்கும் நரகரும் பேய்களும் ஆக்கும்
கலங்கஞர்த் தீவினை கடிமின், கடிந்தால்
தேவரும் மக்களும் பிரமரும் ஆகுதிர்
ஆதலின், நல்வினை அயரா தோம்புமின்
புலவன் முழுதும் பொய்யின் றுணர்ந்தோன்
உலகுயக் கோடற்கு ஒருவன் தோன்றும்
அந்நாள் அவனறம் கேட்டோர் அல்லது
இன்னாப் பிறவி இழுக்குந ரில்லை
மாற்றருங் கூற்றம் வருவதன் முன்னம்
போற்றுமின் அறம் எனச் சாற்றிக் காட்டி
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்தீர்.

(அ) இக் கூற்று இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ஆ) தீவினையால் உண்டாகும் பிறப்புக்களையும் தீவினை கடிவதால் உண்டாகும் பிறப்புக்களையும் குறிப்பிடுக.
(இ) அறத்தைப் போற்ற வேண்டும் என்பது எவ்வாறு வலியுறுத்தப்படுகிறது ?
(ஈ) இதில் இடம்பெற்றுள்ள உருவக அணியின் சிறப்பினை விளக்குக.

(24 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**2.** 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால் - மற்றப்
பாதி துலங்குவ தில்லை.
சாதி களைந்திட்ட ஏரி - நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்.
சாதிப் பிணிப்பற்ற தோளே - நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும்.

என்றுரைப் பார்என் னிடத்தில் - அந்த
இன்ப உரைகளென் காதில்
இன்றும் மறைந்திட வில்லை - நான்
இன்றும் இருப்பத னாலே
பன்னும் நம்பாரதி யாரின் - நல்ல
பச்சைஅன் புள்ளத்தி னின்று
நன்று பிறந்தஇப் பேச்சு - நம்
நற்றமி ழர்க்கெழில் மூச்சு.

மேலவர் கீழவர் இல்லை - இதை
மேலுக்குச் சொல்லிட வில்லை
நாலு தெருக்களின் கூட்டில் - மக்கள்
நாலா யிரத்தவர் காணத்
தோலினில் தாழ்ந்தவர் என்று - சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்.
மேலும்அப் பாரதி சொல்வார் - 'சாதி
வேரைப் பொசுக்குங்கள்' என்றே.

செந்தமிழ் நாட்டினிற் பற்றும் - அதன்
சீருக்கு நல்லதோர் தொண்டும்
நிந்தை இலாதவை அன்றோ - எந்த
நேரமும் பாரதி நெஞ்சம்
கந்தையை எண்ணுவ தில்லை - கையிற்
காசை நினைப்பதும் இல்லை
செந்தமிழ் வாழிய! வாழி - நல்ல
செந்தமிழ் நாடென்று வாழ்ந்தார்.

(i) சாதி ஒழிப்புக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்புகுறித்த பாரதியின் நிலைப்பாடு எவ்வாறு காட்டப்படுகின்றது ?

(ii) சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் முரண்பாடற்ற பாரதியின் ஆளுமை எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது ?

(iii) பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இடையிலான நெருங்கிய உறவு எவ்வாறு வெளிப்படுகின்றது ?

(iv) கையாளப்பட்டுள்ள உருவகங்களின் சிறப்பினை விளக்குக.

**அல்லது**

[பக். 3 ஐப் பார்க்க

kalvi.lk

(ஆ) சீதையும் ராமனும் தன்னைப் பார்க்க வருவார்கள் என்று அகலிகை உள்ளம் பூரித்தாள். வரவேற்பு ஆரவாரம் ஒடுங்கியதும் அவர்கள் இருவரும் பரிவாரம் இன்றி வந்தார்கள்.

ரதத்தைவிட்டு இறங்கிய ராமனது நெற்றியில் அநுபவம் வாய்க்கால் வெட்டியிருந்தது. சீதையின் பொலிவு அநுபவத்தால் பூத்திருந்தது. இருவர் சிரிப்பின் லயமும் மோஷ லாகிரியை ஊட்டியது.

ராமனை அழைத்துக்கொண்டு கோதமன் வெளியே உலாவச் சென்றுவிட்டான்.

தன் கருப்பையில் கிடந்து வளர்ந்த குழந்தையால் சுரக்கும் ஒரு பரிவுடன் அகலிகை அவளை உள்ளே அழைத்துச் சென்றாள்.

இருவரும் புன்சிரிப்புடன் உட்கார்ந்திருந்தார்கள்.

ராவணன் தூக்கிச்சென்றது, துன்பம், மீட்பு எல்லாவற்றையும் துன்பக்கறை படியாமல் சொன்னாள் சீதை. ராமனுடன் சேர்ந்துவிட்ட பிறகு துன்பத்துக்கு அவளிடம் இடம் ஏது ?
அக்கினிப் பிரவேசத்தைச் சொன்னாள். அகலிகை துடித்து விட்டாள்.

"அவர் கேட்டாரா ? நீ ஏன் செய்தாய் ?" என்று கேட்டாள்.

"அவர் கேட்டார்; நான் செய்தேன்" என்றாள் சீதை, அமைதியாக.

"அவன் கேட்டானா ?" என்று கத்தினாள் அகலிகை; அவள் மனசில் கண்ணகிவெறி தாண்டவமாடியது.

அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா ?

ஏமாற்றா ? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா ?

இருவரும் வெகு நேரம் மௌனமாக இருந்தனர்.

"உலகத்துக்கு நிரூபிக்க வேண்டாமா ?" என்று கூறி, மெதுவாகச் சிரித்தாள் சீதை.

"உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா ? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா ?" என்றாள் அகலிகை. வார்த்தை வறண்டது.

"நிரூபித்துவிட்டால் மட்டும் அது உண்மையாகிவிடப் போகிறதா; உள்ளத்தைத் தொடவில்லையானால் ? நிற்கட்டும்; உலகம் எது ?" என்றாள் அகலிகை.

வெளியில் பேச்சுக்குரல் கேட்டது. அவர்கள் திரும்பி விட்டார்கள்.

சீதை அரண்மனைக்குப் போவதற்காக வெளியே வந்தாள். அகலிகை வரவில்லை.

ராமன் மனசைச் சுட்டது; காலில் படிந்த தூசி அவனைச் சுட்டது.

ரதம் உருண்டது; உருளைகளின் சப்தமும் ஓய்ந்தது.

(i) இந்த உரைப்பகுதியில் சீதையின் மனநிலை எவ்வாறு காட்டப்படுகிறது ?

(ii) அகலிகையின் மனநிலையில் ஏற்படும் மாற்றத்தை ஆசிரியர் எவ்வாறு சித்திரிக்கின்றார் ?

(iii) அக்கினிப் பிரவேசம், கண்ணகிவெறி, குடலோடு பிறந்த நியாயம் - இத் தொடர்கள் மூலம் உணர்த்தப்படுவனவற்றைத் தெளிவுபடுத்துக.

(iv) சம்பவ நகர்ச்சியைக் காட்சிப்படுத்துவதில் ஆசிரியர் காட்டும் திறன் குறித்தும், அவரது மொழிநடை குறித்தும் கருத்துக் கூறுக.

(16 புள்ளிகள்)

## பகுதி II

3. **மன்னரைச் சேர்ந்தொழுகல்** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) மன்னரைச் சேர்ந்தொழுக வேண்டிய முறைமை குறித்து வள்ளுவர் பொதுவகையாற் கூறுபவை யாவை ?

(ஆ) அது குறித்து சிறப்பு வகையாற் கூறுபவை யாவை ?

(இ) அரசர் பொறுத்துக்கொள்வர் என்ற எண்ணத்தில் அவர் வெறுப்பனவற்றைச் செய்தல் தகாது என்பதை வள்ளுவர் எவ்வாறு வலியுறுத்துகிறார் ?

(ஈ) மன்னரைச் சேர்ந்தொழுக வேண்டிய முறைமையை விளக்குவதற்கு வள்ளுவர் கையாண்ட உவமையில் நீர் காணும் சிறப்பினை விளக்குக.

(20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

kalvi.lk

4. **கைகேயி சூழ்வினைப் படலத்தில்,** மகுடம் சூட வருமாறு சுமந்திரன் அழைத்ததற்கிணங்கித் தேரேறிச் சென்ற இராமன், தசரதன் அரண்மனையை அடைந்தது வரையுள்ள பகுதியில்,

(அ) இராமனது தோற்றப் பொலிவும்

(ஆ) பெருமைகளும்

(இ) அவனிடத்து ஊர்மக்கள் கொண்ட ஆர்வமும்

(ஈ) அவனிடத்து அவர்கள் வைத்த எதிர்பார்ப்புகளும்

(உ) உவமை அணியினைக் கையாளும் கம்பனது ஆற்றலும்

விளங்குமாற்றைத் தெளிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

5. **சீறாப்புராணம்** மழையழைப்பித்த படலத்தை ஆதாரமாகக் கொண்டு,

(அ) மழையை அழைக்க நேர்ந்த சூழ்நிலை

(ஆ) மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட துன்பம்

(இ) நபிகள்மீது உமறுப்புலவர் கொண்ட ஈடுபாடு

என்பவற்றைத் தெளிவுறுத்தி,

(ஈ) தமிழிலக்கிய வரலாற்றில் சீறாப்புராணம் பெறும் இடத்தினை விளக்குக.

(20 புள்ளிகள்)

6. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் **நகைப்பூங்கொத்து** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

(அ) நகைப்பூங்கொத்து என்னும் தலைப்பின் பொருத்தப்பாட்டினையும்

(ஆ) தாயின் குணநலன் சித்திரிக்கப்படுமாற்றினையும்

(இ) தலைவியின் காதல்வயப்பட்ட மனநிலையையும்

விளக்கி,

(ஈ) பண்டிதமணியினது உரைநடையின் சிறப்பியல்புகளை எடுத்துக்காட்டுக.

(20 புள்ளிகள்)

7. **நீண்ட பயணம்** நாவலில் இடம்பெறும்,

(அ) மாதவன்

(ஆ) பென்சனியர் சீனிவாசகத்தார்

(இ) வள்ளி

ஆகிய பாத்திரங்களின் குண இயல்புகளை விளக்கி, அப்பாத்திரங்கள் கதை வளர்ச்சிக்கு உதவுமாற்றைத் துலக்குக.

(20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) சுந்தரரின் **சீபர்ப்பதம்** பதிகத்தில் இயற்கை வருணனை

(ஆ) **தேம்பாவணி** - பைதிரம் நீங்கு படலத்தில் சூசை, ஏரோது மன்னன் ஆகியோரது குண இயல்புகள்

(இ) **யுகசந்தி** சிறுகதையில் கௌரிப்பாட்டியின் ஆளுமை

(ஈ) **சம்பள நாள்** என்ற குறிஞ்சித் தென்னவன் கவிதையில் தோட்டத் தொழிலாளரின் துயரம்

(20 புள்ளிகள்)

* * *

kalvi.lk

24729

AL/2014/72/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இல் உள்ள **மூன்று** வினாக்களையும், பகுதி II இன் **'அ'** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் **'ஆ'** பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* முதலாம் வினாவின் **'அ'** பகுதியிலுள்ள **இருபது** வினாக்களும் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

**சுட்டெண் :** ..........................

## பகுதி I

**1.** (அ) **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் கூட்டுயிர்
(1) ஆ (2) ஈ (3) ஐ (4) கை (5) ஓ (......)

1.2 ஈரிதழ் ஒலி **அமையப்பெறாத** சொல்
(1) பஞ்சு (2) அவல் (3) துக்கம் (4) மருந்து (5) மோகம் (......)

1.3 ஊகார உயிர் அமைந்த சொற்களை மாத்திரம் கொண்ட தொகுதி
(1) மூடுபனி, குமூஉக்குறி, கேடயம் (2) பூணூல், இலைச்சாறு, நன்னூல்
(3) கூக்குரல், ஜூலை, பூபாளம் (4) கோவூர், மேட்டூர், பாலாறு
(5) அர்ஜுணன், அவதூறு, இறும்பூது (......)

1.4 'கள்' விகுதி இணையும்போது அவ்விகுதியின் முதல் எழுத்தை இரட்டிக்கச் செய்யும் சொல்
(1) மாடு (2) புல் (3) மரம் (4) காய் (5) பசு (......)

1.5 இயல்பு புணர்ச்சி இடம்பெற்றுள்ள சொல்
(1) தேங்காய் (2) பாலாடை (3) தலைக்கவசம் (4) மரப்பலகை (5) பலாவிலை (......)

1.6 'இ' என்னும் இறந்தகால இடைநிலை அமையப்பெற்ற சொல்
(1) ஓடினேன் (2) ஓடினர் (3) ஓடின (4) ஓடியது (5) ஓடினாய் (......)

1.7 பகுதி இரட்டித்துக் காலங்காட்டும் சொல்
(1) நடந்தாள் (2) கூப்பிட்டான் (3) ஓடினான்
(4) வேண்டினான் (5) கண்டான் (......)

1.8 தன்வினையாகவும் பிறவினையாகவும் அமையும் சொல்
(1) ஓடு (2) உண் (3) நனை (4) போடு (5) செய் (......)

1.9 மரியாதை ஒருமைப் பொருள் உணர்த்தும் சொல்
(1) தாய்மார் (2) தாயார் (3) தாய் (4) தாயர் (5) தாய்மார்கள் (......)

1.10 விளிவேற்றுமை **ஏற்காத** பெயர்
(1) தம்பி (2) மனம் (3) நீ (4) தாய் (5) ஆசிரியர் (......)

[பக். 2 ஐப் பார்க்க

kalvi.lk

1.11 'வாய்க்கால் வழியே நீர் வழிந்தோடியது' - வாய்க்கால் என்பது

(1) காலப்பெயர் (2) சினைப்பெயர் (3) ஆக்கப்பெயர்
(4) கூட்டுப்பெயர் (5) உறவுப்பெயர் (……)

1.12 'ஆக' என்னும் விகுதி பெற்று வினையடையாக இயங்கவல்ல தொழிற்பெயர்

(1) பாடுதல் (2) இனிமை (3) வாடுதல் (4) ஆறுதல் (5) சீறுதல் (……)

1.13 'பார்' என்பது துணைவினையாக அமைந்த வாக்கியம்

(1) சுற்றுலாவின்போது பல இடங்களையும் பார்த்தேன்.
(2) அவன் அவளோடு சென்றதைப் பார்த்தேன்.
(3) அவன் எப்படிப்பட்டவன் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.
(4) அவனைத் திருத்துவதற்காக எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்.
(5) ஊருக்குச் சென்று வீட்டாரைப் பார்த்து வந்தேன். (……)

1.14 'அவன் நன்றாகப் படிக்கவில்லை'
'அவன் சித்தியடைந்தான்'
இந்த வாக்கியங்களை இணைப்பதற்குப் **பொருத்தமற்ற** இணைப்பிடைச் சொல்

(1) ஆனால் (2) ஆகையால் (3) எனினும்
(4) என்றாலும் (5) இருப்பினும் (……)

1.15 செயப்பாட்டு வினை வடிவத்துக்கு **மாற்றமுடியாத** வாக்கியம்

(1) யானை பாகனைக் கொன்றது.
(2) பாகன் யானைக்கு உணவூட்டினான்.
(3) யானை சோற்றுக் கவளத்தை விழுங்கியது.
(4) யானை தறிகெட்டு ஓடியது.
(5) பாகன் யானையைத் தறியில் கட்டினான். (……)

1.16 'உறுப்பினர் சிலர் வந்தனர்' என்ற கருத்துப்படும் வாக்கியம்

(1) உறுப்பினர்கள் எல்லோரும் வந்தனர்.
(2) உறுப்பினர் எவரேனும் வராது விடவில்லை.
(3) உறுப்பினர் எல்லோரும் வரவில்லை.
(4) உறுப்பினர் அனைவரும் வந்திருந்தனர்.
(5) உறுப்பினர் ஒருவராவது வரவில்லை. (……)

1.17 'கேட்பதற்கு மிகவும் இனிமையான......' - இது ஒரு

(1) பெயர்த்தொடர் (2) வினையடைத்தொடர் (3) பெயரடைத்தொடர்
(4) வினைத்தொடர் (5) வாக்கியத்தொடர் (……)

1.18 'அமைச்சர், நேற்று கப்பல்மூலம் இந்தியாவுக்குச் சென்றார்.'
மேற்படி வாக்கியத்தின் அடிப்படையில், சென்ற இடம் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு, 'ஆ' என்னும் வினா இடைச்சொல்லை எச்சொல்லோடு இணைத்துக்கொள்ள வேண்டும்.

(1) அமைச்சர் (2) கப்பல்மூலம் (3) இந்தியாவுக்கு
(4) நேற்று (5) சென்றார் (……)

1.19 தானியாகுபெயர் இடம்பெற்றுள்ள தொடர்

(1) தாமரை சூடினாள் (2) ஊர் அடங்கியது
(3) கழல் பணிந்தான் (4) வெள்ளை உழுதது
(5) கார்த்திகை பூத்தது (……)

1.20 பொருள் மயக்கம் **அற்ற** வாக்கியம்

(1) ஆசிரியரைப் பாடசாலையிலிருந்து வரும்போது கண்டேன்.
(2) ஆசிரியர் பாடசாலையிலிருந்து வரும்போது அவரைக் கண்டேன்.
(3) ஆசிரியரை பாடசாலையிலிருந்து வரும்போது நான் கண்டேன்.
(4) பாடசாலையிலிருந்து வரும்போது நான் ஆசிரியரைக் கண்டேன்.
(5) நான் பாடசாலையிலிருந்து வரும்போது ஆசிரியரைக் கண்டேன். (……)

(20 புள்ளிகள்)

* *

[பக். 3 ஐப் பார்க்க

இங்கே வெட்டி அகற்றவும்

kalvi.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இல் உள்ள **1**ஆம் வினாவின் **'ஆ'** பிரிவுக்கும் **2**ஆம், **3**ஆம் வினாக்களுக்கும்,
* பகுதி **II** இல் **'அ'** பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் **'ஆ'** பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (ஆ) பின்வரும் **ஐந்து** வினாக்களுக்கும் சுருக்கமான விடை எழுதுக.

1. இடைநிலை மெய்ம்மயக்கத்தின் வகைப்பாட்டினை உதாரணம் தந்து விளக்குக.
2. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்றால் என்ன ? உதாரணம் தந்து விளக்குக.
3. முதல்வினை, துணைவினை என்பவற்றை உதாரணம் தந்து விளக்குக.
4. வியங்கோள் வினைமுற்றின் இயல்பினை விளக்கி, அது உணர்த்தும் பொருள்களுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
5. தொகைநிலைத் தொடர் என்றால் என்ன ? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

"மற்றவர்கள் என்ன இடையூறு செய்தாலும் சரி, என் கணவனுக்காக என் வாழ்க்கையைத் தியாகம் செய்வேன்," என்று வாழும் உயர்ந்த மனைவியைப் போல, "மற்றவர்கள் எங்கள் வாழ்க்கையைக் கெடுக்க முயன்றாலும் சரி, என் மனைவிக்காக என் வாழ்க்கையைத் தியாகம் செய்வேன்," என்று வாழும் உயர்ந்த கணவனைப் போல, காந்தி சமய நெறிக்காகத் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்தார். அவருக்கு கடவுள் என்றால் ஒரு பெயரல்ல; ஒரு வடிவம் அல்ல; உண்மையே கடவுள் என்று உணர்ந்தவர் அவர். சமயம் என்றால், சில குறிகள் என்றோ, சில சடங்குகள் என்றோ, சில சொற்கள் என்றோ, சில நூல்கள் என்றோ அவர் கொள்ளவில்லை. இன்னா செய்யாமை (அஹிம்சை) என்னும் அறத்தையே அவர் சமய நெறியாகக் கொண்டார். உலகத் தொண்டையும் தனி வாழ்க்கையையும் பிரிக்கமுடியாதபடி இணைத்துக்கொண்ட அவர் உலகத்தைவிட்டு ஒதுங்கவில்லை; உலகத்தின் பெரும் போராட்டத்திற்கு இடையே நின்று உண்மை என்னும் கடவுளை வழிபட்டு இன்னா செய்யாமல் வாழ்ந்தார். சமயத்துறையில் இவர் பெற்ற பெரு வெற்றி இதுதான். அதனால்தான் அவர் தம்முடைய வாழ்க்கை நூலுக்கு வேறு பெயர் வைக்காமல் சத்திய சோதனை என்றே பெயரிட்டார். தியாகம் செய்வது என்றே துணிந்துவிட்ட கணவனோ மனைவியோ குடும்ப இடையூற்றைக் கண்டு அஞ்சாமல் மகிழ்ச்சியோடு அதற்குப் பலியாக முந்திக் கொள்வதைப்போல், காந்தி அண்ணலும் உலக வாழ்க்கையில் வந்த இடர்களைக் கண்டு ஒதுங்காமல் மகிழ்ச்சியோடு பலியாவதற்குத் துணிந்து நின்றார். இடர் நெருங்க நெருங்க ஊக்கம் மிகுதியாகக் கொண்டார். சத்தியம் ஒன்றே தம் எதிரில் இருப்பதாகக் கருதினார். தம்மையும் உலகத்தையும் பொருட்படுத்தாமல் சத்தியத்தையே போற்றினார். உலகத்தாரின் பழி, புகழ், விருப்பு, வெறுப்பு இவைகளால் அவருடைய மனதை மாற்ற முடியவில்லை.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

உணர்ச்சிகளுக்குச் சிறப்பிடம் கொடுக்கும் இலக்கியத்தில் கற்பனையும் கலையுணர்வும் கலந்து காணப்படும். கற்பனை உடையவர் தம்முடைய அனுபவத்தோடு மனித உணர்ச்சிகளைப் பெருக்கியும், அவற்றிற்கு நயமிகு கலையழகு என்ற வண்ணத்தைப் பூசியும் கவர்ச்சியுடையதாக எடுத்துரைக்க இயலும். அத்தகைய கலைஞர்கள் படைக்கும் இலக்கியத்தில் அறிவுக்கும் கருத்துக்கும் முதலிடம் தரப்படுவது இல்லை. கவர்ச்சிக்கே முதலிடம் தரப்படுகிறது. இத்தகைய இலக்கியங்கள் மக்கள் உள்ளத்தை நெகிழ்விக்கும் ஆற்றலும், கவரும் திறனும் உடையனவாகும். அவற்றை 'ஆற்றல் இலக்கியங்கள்' என்பர். அவை கற்பவர் மனதை மகிழ்விப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கும். ஒரு சில இலக்கியங்கள் இதற்கு விதிவிலக்காக, மகிழ்விப்பதோடு அறிவுறுத்துவனவாகவும் அமையும். அவ்வாறு அமைகின்ற இலக்கியங்களே, உலகில் பொன்றாப் புகழ்பெற்று விளங்குகின்றன.

நீதி நூல்களும் இலக்கியத்தின் ஒரு வகையேயாகும். ஆனால், அவை குறிப்பிட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படுகின்றன. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டுவதே அவற்றின் குறிக்கோளாகும். நீதிநூல்களை இயற்றும் புலவன் முதிர்ந்த அறிவும், கனிந்த அனுபவமும் உடையவனாக இருக்கின்றான். தான் எடுத்துரைக்க விரும்பும் கருத்திற்கே அவன் முதலிடம் தருகின்றான். எதைச் சொன்னாலும், அதைத் தெளிவாக, மக்கள் பலரும் புரிந்துகொண்டு வாழ்க்கையில் கடைப்பிடிக்குமாறு அவன் சொல்ல நினைக்கின்றான். அவன் உணர்ச்சி வயப்படாது, காரணகாரியத் தொடர்புபடுத்திக் கருத்துகளைக் கோவைப்படுத்துகின்றான். பின்னர், படிப்பவர் மனதில் பதியுமாறு செய்வதற்காக, அவற்றிற்கு அவன் சிறிது கலைமெருகு கொடுக்கின்றான். இப்படைப்புப் பணியில் ஈடுபடும்பொழுது, அவன் கலைகளுக்குரிய உணர்ச்சி, கற்பனை, கருத்து, வடிவம் என்ற நான்கு பண்புகளுள் இறுதியில் உள்ள இரண்டிலேயே கருத்தைச் செலுத்துகிறான்.

[பக். 4 ஐப் பார்க்க

kalvi.lk

'உணர்ச்சி' என்பது இலக்கியத்திற்கு இன்றியமையாத ஒன்பது வகையான சுவையுணர்வுகளைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். காவியப் புலவன் தன்னுடைய காப்பியத்தில் இன்பச்சுவை, அவலச்சுவை போன்றவற்றைப் பயன்படுத்துவதற்குக் கதையின் போக்கில் வாய்ப்புகள் பல கிடைக்கின்றன. அவன் அவ்வாய்ப்புகளை நழுவ விடாமல் நன்கு பயன்படுத்திக் கொள்ளுகிறான். அதனால் அவனுடைய இலக்கியப் படைப்பு கலையழகு பெற்று மிளிர்கிறது. அறநூல் இயற்றும் புலவனுக்கு அத்தகைய வாய்ப்பே கிடையாது. எனினும், தான் கூறவந்த கருத்துகள் கற்பவருக்குக் கவர்ச்சியாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன், தன்னுடைய கருத்துகளோடு உள்ளத்து உணர்ச்சிகளையும் இயன்றவரையில் அவன் குழைத்துத் தருகிறான். இவ்வாறு அவன் செய்யவில்லையானால், அவனுடைய இலக்கியப் படைப்பு விரைவில் மக்களால் மறக்கப்பட்டுவிடும்.

ஆகவே, 'வாழும் இலக்கியமாக' உள்ள திருக்குறள் போன்ற சிறந்த நீதிநூல்களில் உணர்ச்சிக்கு இடமில்லை என்று சொல்லுவது பொருந்தாது. ஏனெனில், உள்ளத்து உணர்ச்சியின் பொங்கலாக வெளிப்படுவதே கவிதை என்பது திறனாய்வாளரின் கருத்தாகும். ஆகவே, ஒன்பான் சுவையுணர்ச்சிகளுக்கு நீதிநூல்களில் இடமில்லை என்பதைவிட, அவற்றிற்குச் சிறப்பிடம் தரப்படுவதில்லை என்று நாம் கூறலாம். திருக்குறள் இதற்கு விதிவிலக்காக இருக்கிறது என்பதை, ஒரு முறை அந்நூல் முழுவதையும் படித்தால் நாம் எளிதில் உணரலாம். வள்ளுவர் வீரச் சுவையையும், அவலச்சுவையையும், இன்பச் சுவையையும் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார்.

(i) 'ஆற்றல் இலக்கியங்கள்' எத்தகைய இயல்பின ?
(ii) கலைகளுக்குரிய நான்கு பண்புகளுள் எவ்வெவற்றில் நீதிநூலின் ஆசிரியன் கருத்துச் செலுத்துகின்றான் ?
(iii) திருக்குறள் விதிவிலக்கான இலக்கியம் என்று எந்த அடிப்படையில் கூறப்படுகின்றது ?
(iv) 'உலகில் பொன்றாப் புகழ்பெற்று விளங்குகின்ற இலக்கியங்கள்' என்ற தொடருக்கு நிகராக திருக்குறளுக்கு வழங்கப்பட்டுள்ள அடைமொழி யாது ?

(10 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பைத் தெரிந்து, 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
(அ) தமிழில் பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும்
(ஆ) வெகுசன ஊடகங்களில் பெண்கள்
(இ) முத்தமிழ் வளர்ச்சிக்கு சுவாமி விபுலாநந்தரின் பங்களிப்பு
(ஈ) இலக்கியக் கல்வியும் மனித மேம்பாடும்
(உ) பணியுமாம் என்றும் பெருமை

(20 புள்ளிகள்)

## பகுதி II

### பிரிவு 'அ'

4. (அ) சங்க இலக்கியங்கள் அகம், புறம் எனப் பகுக்கப்பட்டமைக்கான அடிப்படையினை ஆராய்க.
(ஆ) கைக்கிளை, பெருந்திணை, பாடாண்திணை, காஞ்சித்திணை என்பவற்றை விளக்குக.
(இ) பல்லவர் காலத்திற் கைக்கிளை மரபு கையாளப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

5. (அ) சோழர் காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்துக.
(ஆ) அவற்றுள் அக்கால மன்னர்களின் புகழைப் பாடுவனவாக அமைந்த பிரபந்தங்கள் தொடர்பாகச் சுருக்கமாக விளக்குக.
(இ) நம்பியாண்டார் நம்பியின் இலக்கிய முயற்சிகளை மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

6. (அ) விஜயநகர நாயக்கர்கால இலக்கியங்களின் பொதுப் பண்புகளை விளக்குக.
(ஆ) அக்காலப் பகுதியில் தோன்றிய பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள் குறித்துக் கருத்துரைக்குக.
(இ) காளமேகப் புலவரின் கவியாற்றலை மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

### பிரிவு 'ஆ'

7. (அ) ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்துக்கு முன்பு இலங்கையில் தமிழ்மொழியும் இலக்கியமும் வழங்கியமைக்கான சான்றுகளைத் துலக்கி,
ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தெழுந்த
(ஆ) சோதிட வைத்திய நூல்கள்
(இ) வரலாறுசார் நூல்கள்
(ஈ) கண்ணகி தொடர்பான நூல்கள்
என்பன பற்றி விளக்குக.

(15 புள்ளிகள்)

8. (அ) 19ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் எழுந்த செய்யுள் இலக்கியங்களை வடிவ அடிப்படையில் வகைப்படுத்துக.
(ஆ) புதிய விடயங்களைக் கையாள்வதற்குப் புராணம், தூது ஆகிய வடிவங்கள் பயன்படுத்தப்பட்டவாற்றை விளக்குக.
(இ) முஹம்மது காசிம் சித்திலெப்பை **அல்லது** சைமன் காசிச் செட்டி தமிழ் இலக்கிய வரலாற்றில் பெறும் இடத்தினை மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

* * *

kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page